# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 115/2013

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு நவம்பர் மாதம் 21 -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 21.11.2023**

**பெயர் - நிர்மலா**

**க/பெ - தண்டாயுதபானி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்-21.41. p.m.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**-

2.(1) 11.09.2002 தேதியிட்ட கிரயப்பத்திரம் ஆவண எண் 3412/2002 என சார்பதிவாளர் திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் அசல் **(வா.சா.ஆ 1)** எனவும்.

(2) 03.04.2013 தேதியிட்ட கிரயப்பத்திரம் ஆவண எண் 2583/2013 என சார்பதிவாளர் திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் அசல் **(வா.சா.ஆ 2)** எனவும்.

(3) 03.04.2013 தேதியிட்ட கிரயப்பத்திரம் ஆவண எண் 2584/2013 என சார்பதிவாளர் திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் அசல் **(வா.சா.ஆ3)** எனவும்.

**(மேற்படி ஆவணங்கள் வா.சா.ஆ 1முதல் 3 குறித்து பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணங்கள் மோசடியாக தயார்செய்யப்பட்ட ஆவணங்கள் என ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.)**

(4)16.04.2013 தேதியிட்ட வாதிகள் தனது வழக்கறிஞர் மூலம் மணலிநியூடவுன் காவல்நிலையை காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **(வா.சா.ஆ 4)** எனவும்.

**(5)** 18.04.2013 தேதியிட்ட வாதிகள் தனது வழக்கறிஞர் மூலம் காவல்துறை டி.ஜி.பி. அவர்களுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **(வா.சா.ஆ5)** எனவும்.

(6) 14.02.2013 தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல் **(வா.சா.ஆ6)** எனவும்

(7) 10.02.2022 தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல் (வா.சா.ஆ7) எனவும்

**(மேற்படி ஆவணத்தை குறித்து பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் இது வழக்கிற்கு பின்னிட்ட ஆவணம் என ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.)**

**(8) 29.03.2023 தேதியிட்ட** மின்கட்டன ரசீது அசல் (வா.சா.ஆ 8) எனவும்

**(மேற்படி ஆவணத்தை குறித்து பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் இது வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லா ஆவணம் என ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.)**

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம்- 01.13. p.m.**